


# 01.12. 2024

## தலைப்புச் செய்திகள்

**1.** நாட்டின் பாதுகாப்பு அரணாக எல்லை பாதுகாப்பு படையினர் அளப்பரிய சேவை ஆற்றி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

**2.** தமிழ்நாட்டில் ஃபென்ஜால் மழை நிவாரண பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**3.** ஃபென்ஜால் புயல் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக படிப்படியாக வலுவிழக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

4. தமிழ்நாட்டில் மழை பாதித்த மாவட்டங்களில் இன்று சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது.

**5.** சையத்மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய வீரர்கள் லக்ஷயா சென், பி.வி.சிந்து ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

## இனி விரிவான செய்திகள்

***********

### எல்லை பாதுகாப்பு படை

எல்லை பாதுகாப்பு படையின் 60ஆவது நிறுவன நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோதி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் நாட்டின் எல்லை பகுதிகளை பாதுகாக்கும் இவ்வீரர்களின் வீரம், தீரம், உத்வேகம், அர்ப்பணிப்புமிகு சேவை நாட்டின் பாதுகாப்பிற்கு மிக முக்கிய பங்காற்றுவதாக கூறியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு அரணாக எல்லை பாதுகாப்பு படையினர் அளப்பரிய சேவை ஆற்றி வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

***********

## பிரதமர்

ஒடிசா தலைநகர் புபனேஸ்வரில் நடைபெறும் காவல்துறை தலைமை இயக்குனர்கள் மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திரமோடி இரண்டாவது நாளாக இன்றும் பங்கேற்று அதிகாரிகளுடன் கலந்துரையாடுகிறார்.

முன்னதாக இம்மாநாட்டில் நேற்று உரையாற்றிய அவர் நாட்டின் காவல் படைகள் உலக தரத்துடன் நவீனமயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

காவல்துறையின் பல்வேறு நடவடிக்கைகள் நவீனமயமாக்கப்படுவதற்கான செயல்திட்டங்களை அடுத்த ஆண்டிற்குள் நடைமுறைபடுத்துவதற்கான யுக்திகள் குறித்தும் பிரதமர் விவாதித்தார்.

***********

## ஜக்தீப் தன்கர்

குடியரசு துணை தலைவர் திரு.ஜக்தீப் தன்கர் உத்திர பிரதேச மாநிலம் கான்பூர் ஐஐடி-யில் மாணாக்கரிடையே இன்று உரையாற்றுகிறார்.

முன்னதாக ஜெய்பூரிய பள்ளியின் பொன்விழா கொண்டாட்டங்களிலும் அவர் கலந்துகொள்கிறார்.

***********

## நாகலாந்து

நாகலாந்து மாநிலம் உருவான 62 ஆவது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி

திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர், பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

***********

## எயிட்ஸ் தினம்

உலக எயிட்ஸ் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா மத்திய பிரதேச மாநிலம் இந்தோரில் விழிப்புணர்வு நிகழ்ச்சியை இன்று தொடங்கிவைக்கிறார்.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில் தமிழகத்தை எயிட்ஸ் நோய் இல்லாத மாநிலமாக உருவாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளார்.

***********

## முதலமைச்சர்

தமிழகத்தில் ஃபென்ஜால் மழை நிவாரண பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தில் இன்று அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் காணொலி வாயிலாக ஆய்வு மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் தண்ணீர் தேங்காத வகையில் மின்மோட்டார்கள் மூலம் மழைநீர் வெளியேற்றப்படுவதாக கூறினார்.

பெரும்பாலான இடங்களில் மழை நீர் வடிந்துவிட்டதாக தெரிவித்த அவர் அதிகம் மழை பொழிவு பதிவான விழுப்புரம் மாவட்டத்தில் மாநில அமைச்சர்கள் திரு.பொன்முடி திரு.சிவசங்கர் திரு.செந்தில் பாலாஜி ஆகியோர் முகாமிட்டு நிவாரண பணிகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

**வாய்ஸ்**

முன்னதாக சென்னை கொளத்தூரில் மழை வெள்ள பாதிப்புகளை இன்று நேரில் ஆய்வு செய்த அவர், ஆரம்ப

சுகாதார நிலையங்களில் மருந்து பொருட்களின் இருப்பு குறித்து கேட்டறிந்தார்.

**இதனிடையே விழுப்புரத்தில் புயல் கட்டுப்பாட்டு** அறையை ஆய்வு செய்த மாநில வனத்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை கணக்கெடுக்கும் பணிகள் தொடங்கியுள்ளதாக கூறினார்.

புயலால் 51 இடங்களில் மின்கம்பங்கள் சாய்ந்துள்ளதாகவும் அவற்றை உடனடியாக சீரமைத்து தடையின்றி மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

***********

**புயல்**

ஃபென்ஜால் புயல் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக படிப்படியாக வலுவிழக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய தென் மண்டல தலைவர் திரு.பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி அருகே கரையை கடந்த இப்புயல் அடுத்த 6 மணி நேரத்தில் வலுவிழக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன்காரணமாக மாமல்லபுரம், சென்னை காஞ்சிபுரம், திருவள்ளூர் செங்கல்பட்டு ராணிப்பேட்டை விழுப்புரம் கடலூர் மாவட்டங்களில் மழை தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***********

**ராஜேந்திரன்**

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் 24 மணி நேர கட்டுப்பாட்டு அறையை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

மழையால் சாலைகளில் ஏற்படும் பாதிப்புகளை உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நெடுஞ்சாலைத்துறையினர் உடனுக்குடன் சரிசெய்ய அறிவுறுத்திய அவர், மின் பாதிப்புகள், மருத்துவ முகாம்கள், கழிவுநீர் கால்வாய்கள்

உள்ளிட்டவைகளை மக்கள் நல அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிக்க அறிவுறுத்தினார்.

பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி கட்டிடங்களின் உறுதிதன்மையை அதிகாரிகள் ஆய்வு செய்து ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

***********

**ஆவின்**

சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள ஆவின் பாலகங்களில் பால் மற்றும் பால் பொருட்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தடையின்றி 100 சதவிகிதம் பால் விநியோகம் செய்யப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

***********

**மருத்துவ முகாம்**

ஃபென்ஜால் புயல் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட சென்னை திருவள்ளூர் செங்கல்பட்டு விழுப்புரம் கள்ளக்குறிச்சி கடலூர் காஞ்சிபுரம் மாவட்டங்களில் இன்று 500 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெறுவதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை சைதாப்பேட்டையில் இம்முகாமை தொடங்கிவைத்த அமைச்சர் மாலை 4 மணிவரை நடைபெறும் இம்முகாமில் சளி, காய்ச்சல் மட்டுமன்றி தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் வழங்கப்படுவதாக கூறினார்.

**சென்னை மங்களாபுரம் பகுதியில் மருத்துவ** முகாமை தொடங்கிவைத்து பேசிய மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தமிழக அரசு மக்களின் நலனை கருத்தில் கொண்டு நிவாரண பணிகளை 24 மணி நேரமும் மேற்கொண்டு வருவதாக கூறினார்.

இப்பணிகளை விரைவுபடுத்த அந்தந்த மாவட்டங்களில் அமைச்சர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் களப்பணியாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

***********

**தர்மபுரி மழை**

தர்மபுரி மாவட்டம் வல்லிமதுரை அணை நடப்பாண்டில் இரண்டாவது முறையாக அதன் முழு கொள்ளளவை எட்டியதால் உபரிநீர் திறந்துவிடப்படுவதை அடுத்து வரட்டாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் வெள்ள நீரால் பாதிக்கப்பட்ட இலக்கியம்பட்டி, பாரதிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீரை அகற்றும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சாந்தி இன்று நேரில் ஆய்வு செய்தார்.

வெள்ள பாதிப்பு குறித்து 1077 என்ற மாவட்ட கட்டுப்பாட்டு அறைக்கு பொதுமக்கள் தெரிவிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

**வாய்ஸ்**

***********

**கள்ளக்குறிச்சி வேலூர் காஞ்சிபுரம் மழை**

**கள்ளக்குறிச்சி மாவட்டம் கோமுகி அணைக்கு** நீர்வரத்து அதிகரித்ததை அடுத்து அணையிலிருந்து வினாடிக்கு 3 ஆயிரத்து 400 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

கரையோர மக்கள் ஆற்றை கடக்கவோ, இறங்கவோ வேண்டாம் என மாவட்ட நிர்வாகம் எச்சரித்துள்ளது.

**வேலூர் மாவட்டம் உத்திரகாவிரி ஆற்றின்** அணைக்கட்டு பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு பாதிப்புகளை ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி இன்று பார்வையிட்டார்.

கரடிக்குடி, அணைக்கட்டு பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அவர் அறிவுறுத்தினார்.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாழ்வான** பகுதிகளில் வசிக்கும் மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

***********

**ராணிப்பேட்டை – திருப்பத்தூர்**

**ராணிப்பேட்டை மாவட்டத்தில் பெரும்பாலான** இடங்களில் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதால் பொன்னை, பாலாற்றில் இருந்து வரும் ஆயிரம் கன அடி நீர் மாவட்டத்தில் உள்ள ஏரிகளுக்கு திருப்பிவிடப்படுவதாக ஆட்சித்தலைவர் டாக்டர் சந்திரகலா தெரிவித்துள்ளார்.

பாலாறு, அணைக்கட்டு அரசு தலைமை மருத்துவமனை உள்ளிட்ட இடங்களை அவர் ஆய்வு செய்தார்.

அரக்கோணம் சோழிங்கர், வாலாஜா கலவை நெமிழி உள்ளிட்ட பகுதிகளில் சாலைகளில் மழை நீர் தேங்கியுள்ளது.

**திருப்பத்தூர் மாவட்ட சுற்றுவட்டார** பகுதிகளில் பெய்த மழை காரணமாக ஜலகம்பாறை நீழ்வீழ்ச்சியில் நீர் ஆர்ப்பரித்து கொட்டுவதை அடுத்து சுற்றுலா பயணிகள் அங்கு செல்ல வனத்துறை தடை விதித்துள்ளது.

***********

**திருவண்ணாமலை அணை**

திருவண்ணாமலை மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக சாத்தனூர் அணை நிரம்பி அதன் முழு கொள்ளளவை எட்டியதை அடுத்து அணைக்கு வரும் 9 ஆயிரத்து 500 கன அடி தண்ணீர் முழுவதுமாக தென்பெண்ணை ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் குப்பநத்தம், செண்பகத்தோப்பு அணைகளும் நிரம்பியுள்ளதால் கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கீழ் பெண்ணாத்தூர், கலசபாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளது.

**செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் மழையால்** சாய்ந்த மரங்களை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரியஏரி நிரம்பி உபரி நீர் வெளியேற்றப்படுவதால் ஒட்டியம்பாக்கம் பிரதான சாலை நீரில் மூழ்கியுள்ளது.

சோழிங்கநல்லூர் பகுதியிலும் சாலைகள் நீரில் மூழ்கியுள்ளன.

***************

**மழை மாவட்டம்**

விழுப்புரம் மாவட்டம் மயிலத்தில் அதிகபட்சமாக 50 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ள நிலையில் இன்றும் மழை நீடிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்:

***************

**கன்னியாகுமரி – பள்ளி**

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை அரசு மேல்நிலைப்பள்ளி வளமிகு பள்ளியாக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

***************

**பேட்மிண்டன்**

லக்னோவில் நடைபெறும் சையத்மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் லக்ஷயா சென் - சிங்கப்பூரின் ஜியா ஹெங் ஜேசனை எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் பி.வி.சிந்து – சீனாவின் Wu Luo Yu-வுடன் மோதுகிறார்.

***************

**ஹாக்கி**

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் மஸ்கட்டில் இன்று இரவு 7 மணிக்கு இந்தியா - தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

***********

**கிரிக்கெட்**

கான்பராவில் இன்று ஆஸ்திரேலியன் PM eleven அணிக்கு எதிரான பயிற்சி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 241 என்ற வெற்றி இலக்குடன் விளையாடும் இந்தியா சற்றுமுன் 5 ஓவரில் விக்கெட் இழப்பிற்கு 8 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியன் PM eleven அணி 240 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

மழையால் ஆட்டம் 46 ஓவராக குறைக்கப்பட்டது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

***********